# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1920/23 - 2015 ජූනි මස 24 වැනි බදාදා - 2015.06.24

*1920/23 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆவது உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2015, யூன் 23.

1. 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதிய 1813/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2013 யூன் 05 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் விசேட இறக்குமதி உரிமக் கட்டளை மேலும் இத்தால் திருத்தப்படுகின்றது.

2. ஏற்றுமதிக்காகத் தயாரிப்பதற்கு தற்காலிக பொருட்களை இறக்குமதி செய்யும் முன்மொழிவுத் திட்டத்தின் (Temporary Importation for Export Processing Scheme - TIEP ) கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆம் திகதிய 1813/ 14 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட I ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்ட I, II, III ஆம் நிரல்களில் இத்தால் உள்ளடக்கப்படுகின்றது.

| | நிரல் I எச். எஸ். தலைப்பு | நிரல் II எச். எஸ். குறியீடு | நிரல் III விபரம் | ஏற்றுமதி இறக்குமதி உரிமக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | 08.02 | 0802.80 | அரிகா (ஒரு வகை பாக்கு) விதைகள் | |
| | | 0802.80.10 | புதியவை (கோது நீக்காதவை அல்லது பட்டை உரிக்கப்படாதவை) | L |
| | | 0802.80.90 | பிற | L |

3. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் சம்பந்தமான 1518/4 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2007.10.08 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் கூறப்பட்டவை தொடர்ந்தும் இத்தால் திருத்தப்படுகின்றது.

| | எச். எஸ். குறியீடு | விபரம் | உரிமக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| | 0802.80 | அரிகா (ஒரு வகை பாக்கு) விதைகள் | |
| | 0802.80.10 | புதியவை (கோது நீக்காதவை அல்லது பட்டை உரிக்கப்படாதவை) | கி. கி. ஒன்றுக்கு ரூபா 20.00 |
| | 0802.80.90 | பிற | கி. கி. ஒன்றுக்கு ரூபா 20.00 |

4. இந்தத் திருத்தம் 2015, யூன் மாதம் 25 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

7- 476

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.